S.C.No. 187/2018 நாள் 20.07.2026 PW 1 – ரஞ்சித்குமார்

(Crl.M.P.No. 9/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (3 ம் எதிரிதரப்பில் )

நான் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்க சென்றபோது என்னுடன் காவலர்களும் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது போலீசார் எப்படி சாட்சி சொல்ல வேண்டும் என்றும், என்ன விவரங்கள் சொல்ல வேண்டும் என்றும் சொல்லி கூட்டி சென்றார்கள் என்றால் சரிதான். சங்கராஜ் இறந்துபோனதாக தகவல் கேட்டுதான் மருத்துவமனைக்குத்தான் நேரடியாக சென்றேன் என்றால் சரிதான். அங்கு வைத்துதான் போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் அ.சா.ஆ–1ல் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு இதற்கு முன்பு நீதிமன்றத்திலிருந்து வந்த சம்மனுடன் வாக்குமூலத்தையும் சேர்த்துதான் என்னிடம் போலீசார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த பேப்பரில் உள்ளதை படித்து பார்த்துதான் முதல்விசாரணையில் சாட்சியம் சொன்னேன் என்றால் சரிதான். நான் போலீசார் சொல்லிக்கொடுத்தன் அடிப்படையில்தான் முதல்விசாரணையில் சாட்சியம் சொன்னேன் என்றாலும், சங்கராஜை யார் அடித்தார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.